முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1643

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.03.2024,** வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான வடிவமே
ஓங்கார ஞான சொரூபமே
ஓங்காரன் என் அவதாரமே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 16 ம் நாள், 29.03.2024, வெள்ளிக்கிழமை)
2. ஆசியதும் சோபகிருது சேல் திங்கள்
அரங்கனுக்கு ஆற்றல் பெருக உரைப்பேன்
உரைக்கவே அரங்கனுள் யானிருந்து
உலகத்தை கவனித்து வருகின்றேன்
3. வரங்களாக அரங்கன் கரங்கள் பட
வையகத்தார்க்கு தீட்சை பலம் தந்து
தந்துமே உலகமெங்கும் ஆறுமுகன் யான்
தக்கபடி சூட்சுமமாய் அற்புதம் நடத்துகின்றேன்
4. விந்தைபட அரங்கன் பிரணவக்குடிலில்
வினவிட அமுதாகவும் இறங்கி மக்களுக்கு அருமருந்தாக ஆற்றல்பல தந்து
வகைபட உண்டு செல்பவர்க்கு
வரமாக யான் ஆசி தருகின்றேன்
5. தருகவே அரங்கன் தொடர்பு கூட்டி
தக்கபடி அண்ணவன் நாமஜெபம் தன்னில்
சிந்தைபட உலகோர் தர்மங்களும் இயன்ற
சேவைகளும் செய்துகொண்டு வருக
6. வருகவே வையகத்தில் மாற்றம் வல்லமைபட அரங்கன் அவதார நோக்கமாக பூர்த்திகொள்ளும்
சிந்தை கொண்டு என் நாமஜெபத்தோடு செப்பிடுவேன் சரவணச் சுடரேற்றி வருகவருக
வையகத்தில் ஞான ஒளி பரவி
வருங்காலம் ஞான ஆட்சிக்காலமாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–